DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.C. 196/2024** |
| Deposition of Witness for | : | **P.W.10** |
| Name | : | **திரு.கணேசமூர்த்தி** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரி ஆஜர்)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 22.07.2026

**முதல் விசாரணை:**

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம், வேடசந்துார் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.03.2024ம் தேதி தேவகோட்டை நகர் காவல்நிலைய ஆய்வாளராக பணிபுரிந்தபோது தேவகோட்டை உட்கோட்டம் காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணைப்படி தேவகோட்டை நகர் காவல்நிலைய குற்ற எண்.20/2022 பிரிவுகள் 457, 436, 380, 511 இதச வழக்கை அப்போதைய சார்பு ஆய்வளார் அன்சாரி உசேன் என்பவர் கடந்த 21.07.2023ம் தேதி புலன் விசாரணையை முடித்து RCS அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்ததை மறுவிசாரணைக்காக நான் புலன் விசாரணைக்காக

எடுத்துக்கொண்டேன். 26.02.2024 ம் தேதி காளையார்கோவில் காவல் ஆய்வாளர் திரு.ஆடிவேல் அவர்களிடம் எதிரி தினேஷ்குமார் என்பவர் காளையார்கோவில் காவல்நிலைய குற்ற எண்.49/2024 வழக்கில் ஒப்புதல் வாக்குமூலத்தில் மேற்படி இந்த வழக்கு சம்மந்தமாக 22.03.2024 ம் தேதி தேவகோட்டை நகர் சார்பு ஆய்வாளர் திரு.ரெக்ஸ் மூலம் மதுரை மத்திய சிறையில் இருந்த எதிரி தினேஷ்குமாரை சம்பிரதாய கைது செய்யப்பட்டது. பின்னர் பிடி வாரண்ட் பெறப்பட்டு 03.04.2024 ம் தேதி தேவகோட்டை குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். 08.04.2024 ம் தேதி மேற்படி காளையார்கோவில் குற்ற எண்.49/2024 வழக்கில் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான காளையார்கோவில் வட்டாச்சியர் முபாரக் உசேன் அவர்களையும் சோமநாதமங்கலம் குரூப் கிராம நிர்வாக அலுவலர் திரு. மார்சல் என்பவரையும் மற்றும் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பாலகிருஷ்ணன் என்பவரையும் பின்னர் இந்த வழக்கில் குற்ற இறுதி அறிக்கை 1 ஐ தாக்கல் செய்த திரு. அன்சாரி உசேன், சார்பு ஆய்வாளர் அவர்களையும் விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி விசாரணையில் சாட்சிகள் புலன்விசாரணை அதிகாரியிடம் சொன்ன சங்கதிகளையே என்னிடம் சொன்னதால் நான் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து 08.04.2024 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

சம்பவயிடம் சென்று சாட்சிகளை விசாரித்தபோது ஏற்கனவே புலன்விசாரணை அதிகாரியிடம் சொன்ன சங்கதிகளை சொன்னதால் நான் மீண்டும் வாக்குமூலம் பதியவில்லை. அ.சா.1 வித்யா தனது வாக்குமூலத்தில் சம்பவயிடத்திற்கு 4.20 மணிக்கு வந்ததாக சொல்லியிருந்தாரா என்றால் இல்லை. அ.சா.5 சம்பவயிடத்திற்கு வரும்போது வீட்டின் கதவு பூட்டப்பட்டிருந்தது என்ற விபரத்தை சொல்லியிருக்கிறாரா என்றால் மரக்கதவு தாழ்ப்பாள் உடைக்கப் பட்டிருந்ததாக சொல்லியுள்ளார். அ.சா.6 வட்டாச்சியர் இந்த வழக்கு சம்மந்தமாக

எதிரி எந்தவிதமான ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்று சொல்லியுள்ளாரா என்றால் சரிதான், காளையார்கோவில் வழக்கிற்கு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்லியுள்ளார். எதிரியை விசாரிக்க நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான், எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட வேண்டிய பொருட்கள் எதுவும் இல்லாததால் அவரை கஸ்டடி எடுக்கவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக நான் எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை என்றால் சரிதான், வழக்கிற்கு வேண்டிய பொருட்கள் எதுவும் இல்லாததால் ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை. அ.சா.7 சார்பு ஆய்வாளர் பாலகிருஷ்ணனை நான் விசாரிக்கும்போது முதல் தகவல் அறிக்கையை ஏன் 1 மாத காலம் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்ற விபரத்தை கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். புகாரில் இதச பிரிவுகள் 380, 457 பிரிவுகளுக்கான சரத்துகள் இல்லையென்றால் சரியல்ல, வீட்டின் பூட்டை உடைத்து வீட்டில் உள்ள பொருள்களை களவாட வேண்டும் என்ற நோக்கில் சென்றபோது எந்தபொருளும் கிடைக்காததால் கோபத்தில் வீட்டில் உள்ள பொருட்களை எரித்துவிட்டார் என்பது எனது விசாரணையில் தெரியவந்தது எனவே மேற்படி பிரிவு படி நடவடிக்கை எடுக்கப்பட்டது. உடைக்கப்பட்ட பூட்டை ஏன் கைப்பற்றவில்லை என்பதற்கு சிறப்பான காரணம் இல்லை என்றால் சம்பவத்தில் வீடு முழுவதும் தீயில் எரிந்து நாசமாகியுள்ளது எனவே பூட்டை கைப்பற்றாமல் இருந்திருக்கலாம். வீடு சுத்தமாக எரிந்திருந்தால் பூட்டு உடைக்கப்பட்டிருந்த விபரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மண்ணென்ணெய் போன்ற எரிக்கக்கூடிய பொருள்களை பயன்படுத்தப்பட்டதா என்பது குறித்த நான் விசாரித்தேனா என்றால் அது பற்றி விசாரிக்கவில்லை, ஏனென்றால் எதிரி ஏற்கனவே கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் வீட்டில் பொருள்களை திருட போகும்போது நகைகள், பணம் ஏதும் இல்லாததால் கோபத்தில் பீரோவில் இருந்த துணிமணிகள், டாக்குமெண்ட் பேப்பர்களை ஒன்றாக போட்டு தீவைத்த கொளுத்திவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன் என்று ஏற்கனவே வாக்குமூலம் அளித்துள்ளார். இது விபத்தினால்

எரிந்ததாக அல்லது மனிதனால் தீ வைக்கப்பட்டதா என்பது குறித்து நிபுணர்களிடம் கருத்துரை கேட்கப்பட்டதா என்றால் இல்லை. எதிரி ஒப்புதல் வாக்குமூலம் அளித்தது 26.02.2024 என்றால் சரியல்ல, 25.02.2024 ஆகும். எரிந்து உருகிய நிலையில் உள்ள எந்த பொருட்களையும் கைப்பற்றவில்லை என்றால் அப்போதைய சார்பு ஆய்வாளரால் கைப்பற்றப்படவில்லை. தீயணைப்பு துறையை சேர்ந்தவர்கள் மற்றும் கைரேகை நிபுணர்களை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எதிரியை சம்பவ சமயம் பார்த்த நேரடி சாட்சிகளை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.5 கவிதா தனது வாக்குமூலத்தில் வீட்டில் ஏசி இயந்திரம் எரிந்து கொண்டிருந்ததாக கூறியுள்ளாரா என்றால் இல்லை. சம்பவயிடத்தில் இருந்த எளிதில் தீப்பற்றக்கூடிய கேஸ் சிலிண்டர் போன்ற பொருள்களை யார் அப்புறப்படுத்தினார்கள் என்ற விபரத்தை தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. பூட்டு உடைக்கப்பட்டதற்கும் பொருட்கள் எரிந்த சேதமடைந்ததற்கும் ஆவணங்களையோ சான்றுபொருட்களையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தின் காரணமாக ஏற்பட்ட தீ விபத்தை எதிரிக்கு எதிராக பொய்யாக முறையில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**:இல்லை

SUBRAMANIAN MOHANA RAMYA

Digitally signed by SUBRAMANIAN MOHANA RAMYA
Date: 2026.07.22 18:49:48 +0530

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**

**சிவகங்கை.**